# மீண்டும் சிருங்கேரி சென்றேன்

தமிழில் மொழிபெயர்த்தவர் :

சக்திதாசன் சுப்பிரமணியன்

ஜலஜா சக்திதாசன், பி.ஏ.,பி.டி.

*சங்கீத சிரோமணி.*

வெளியிடுபவர் :

ஸ்ரீ வித்வான் கனபாடி என். வி. சூரியநாராயண பட்டர்

1969

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.


You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.



ஸ்ரீ சிருங்கேரி சாரதாம்பாள்



ஸ்ரீ சங்கர பகவத் பாதர்

விலை ரூ. 1.00


கிடைக்குமிடம்:

**ஸ்ரீ வித்வான் கனபாடி என். வி. சூரியநாராயண பட்டர்**

ஸ்ரீ சிருங்கேரி சங்கர மடம்

9, வெங்கடநாராயண ரோடு, சென்னை-17.

அச்சிட்டோர்: தி மதராஸ் சிடி பிரிண்டர்ஸ், சென்னை-34




ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகர பாரதி மகாஸ்வாமி



ஸ்ரீ ஜகத்குரு அபிநவ வித்யாதீர்த்த மகாஸ்வாமி
(பூஜை செய்யும்போது)

# சமர்ப்பணம்

ஸ்ரீ சங்கர பகவத் பாத ஆசாரிய பரம்பரையில் சங்கிலித் தொடர்போல் இடையருது வழி வழி வந்து ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடத்திலிருந்து அருள் ஒளி வீசும் மகா சந்நிதானம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மகா சுவாமிகள் திருவடித் தாமரைகளில் பக்திப் பெருக்குடன் சமர்ப்பிக்கப்பட்டது.



# ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு மகாசமஸ்தானம்
# சாரதா பீடம், சிருங்கேரி.

சிருங்கேரி போஸ்டு — கடூர் (மைசூர் ராஜ்யம்)

சிருங்கேரி
11-1-69

ஸ்ரீ சக்திதாஸ்,

ஸ்ரீ ராமலிங்கேசுவர ராவ் ஆங்கிலத்தில் எழுதிய "மீண்டும் சிருங்கேரி சென்றேன்" என்ற புத்தகத்தைத் தாங்கள் தமிழில் மொழி பெயர்ப்பதாகவும், தியாகராய நகர் சிருங்கேரி மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ வித்வான் கனபாடி சூரியநாராயண பட்டர் அதை விரைவில் வெளியிடுவதாக வும் ஸ்ரீ ஜகதகுரு மகாசந்நிதானம் அவர்களிடம் தெரிவித் துக் கொள்ளப்பட்டது.

தமிழ் படிக்கும் மக்கள் ஆதிசங்கரர் பற்றியும் அவர் தம் அத்வைதக் கருத்துக்கள் பற்றியும் சிருங்கேரி பற்றியும் அறிந்துள்ளவற்றை மேலும் வளர்க்கப் பெருந்துணை புரியும் இப்புத்தகம் என்று கருதி ஸ்ரீ ஜகத்குரு மகாசந்நிதானம் அவர்கள் உளம் மகிழ்ந்து தாங்கள் தங்கள் முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்று அருள் புரிந்துள்ளார்கள்.

தங்களுக்கு வெற்றியும், நூல் வெளியிடுபவரான ஸ்ரீ சூரியநாராயண பட்டருக்குச் செழுமையும் ஏற்படுமாறு ஸ்ரீ ஜகத்குரு மகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் கொண் டுள்ளதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசீர்வாத மந்திராட்சதையும், ஸ்ரீ சாரதா சந்திர மௌளீசுவர பிரசாதமும் அனுப்பப்பட்டுள்ளன.

தங்கள்,

**கே. கிருஷ்ண பட்டர்,**

அந்தரங்க காரியதரிசி.

# பொருள் அடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மதத்தின் ஜீவநாடி | ... | 9 |
| 2. | பிரயாணம் | ... | 12 |
| 3. | இடமும் மக்களும் | ... | 19 |
| 4. | ஆலயங்களைச் சுற்றி | ... | 25 |
| 5. | மீண்டும் வந்த பழைய நினைவு | ... | 31 |
| 6. | புதிய அருட் பிரசாதம் | ... | 41 |

# முன்னுரை

ஸ்ரீ டி. ராமலிங்கேசுவரராவ் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் தமிழாக்கம் இது. ஆங்கில நூலைத் தமிழில் ஆக்கித் தரவேண்டும் என்று ஸ்ரீ சூரியநாராயண பட்டர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

''எங்களிடம் பணம் இல்லை, தரித்திர நாராயணர் நாங்கள். நீங்களே மொழிபெயர்த்து அச்சிட்டுப் புத்தக மாகக் கொடுக்க முடியுமானால் நல்லது'' என்று சொன்னார் கள். ''எனது தற்போதைய நிலையில் பணம் போட்டு அச்சிட்டுப் புத்தகமாக்குவது என்றால் இயலாது. ஆனால் எனக்குப் பணம் வேண்டாம். தமிழில் செய்து கொடுக் கிறேன். எங்காவது அச்சுப் போட்டுக் கொள்ளுங்கள்'' என்று சொன்னேன். '' சரி '' என்றார்கள்.

தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தேன். ஆங்கிலத் தில் மிக அழகாக எழுதியிருக்கிறார் மூல ஆசிரியர். அதன் அருமை திரியாமல் அப்படியே தமிழில் கொடுப்பது கடினம். எனினும் அந்தரங்க சுத்தியுடன் முயற்சி செய்திருக்கிறேன். அவ்வாறு செய்யும்போது சிற்சில இடங்களை ஒதுக்கியிருக்கிறேன். மொழிபெயர்க்கவில்லை. காரணங்கள் இரண்டு. சிருங்கேரி செல்பவர் தடம் மாறாமல் வேகமாகச் செல்ல வேண்டும். ஆசிரியரின் உத்வேகம் — சிருங்கேரி செல்ல அவர் துடித்த துடிப்பு — இடையே தடைபடாமல் வாசகர்களையும் வேகமாக அழைத்துச் செல்ல வேண்டும் என்பது ஒன்று.

மேற்கு நாட்டுத் தத்துவ மேதைகளை எல்லாம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் மூல ஆசிரியர் ஆங்கில நூலில். அந்தப் பெயர்களும் பிறவும் தமிழ் வாசகர்களுக்குப் பழக்கமில்லாதவை. அவற்றை ஆங்கிலத்தில் சொல்வது எளிது. தமிழில் சொல்வது கடினம். இது இரண்டாவது காரணம்.

அந்த விஷயங்களில் சஞ்சாரம் செய்யத் தொடங்கி விட்டால் சிருங்கேரிப் பிரயாணத்திலே வாசகர்களுக்கு அலுப்புத்தட்டி விடுமோ என்ற பயம். எனவே அவற்றை நீக்கி ஒவ்வோர் அத்தியாயத்தின் சாரத்தையும் விடாமல் தந்திருக்கிறேன்.

தமிழ் மொழிபெயர்ப்பாளர் என்ற உரிமையில் மேற் கொண்ட என் முடிவுக்கு வாசகர்கள் மன்னிப்பார்களாக.

என்பால் அருள்மாரி பொழியும் மகா சந்நிதானம் அவர்கள் எனது தமிழ் மொழிபெயர்ப்புக்கு ஆசி கூறித் திருமுகம் அனுப்பி யிருக்கிறார்கள்.

அவர்கள் திருவடித் தாமரைகளில் விழுந்து வணங்குகிறேன்.

சக்திதாசன்.

# 1. மதத்தின் ஜீவநாடி

சிருங்கேரி செல்லும் வழியிலே கண்ட இயற்கைக் காட்சிகளை ஆங்காங்கே விவரித்திருப்பினும் இது ஒரு பிரயாணக் கதை அன்று. சரித்திரமும் அன்று. ஏனெனில் நான் சரித்திரத்திலே நம்பிக்கை இல்லாதவன். சரித்திரம் என்பது என்ன ? வாழ்வின் கதை. வாழ்வாவது மாயம். மாயத்தைப் பற்றி எழுத வேண்டுமா ? உண்மையையல்லவா எழுத வேண்டும் ? இந்திய ரிஷிகள் இந்த உண்மையை உரைத்திருக்கிறார்கள். மறைமுகமாகவும் சொல்லியிருக்கிறார்கள்; வெளிப்படையாகவும் சொல்லியிருக்கிறார்கள். நமது இலக்கியப் பொக்கிஷங்களிலே அவற்றைக் காணலாம். இந்த பொக்கிஷத்தை மேற்கு நாட்டுச் சிந்தனையாளர்கள் இன்னும் கண்டு கொண்டபாடில்லை. கண்டு கொண்டால் உலகத்தின் சிந்தனையிலே புதிய நோக்குண்டாகும்.

ஒரு காலத்திலே ரைன் நதிப் பிரதேசம் உயர்ந்த லட்சியக் கனவு காணும் பகுதியாக விளங்கியது. இதற்குக் காரணம் என்ன ? இந்தியாவின் சிந்தனைகள் தொலைதூரத்தில் உள்ள ஜெர்மனியை எட்டியதுதான். எப்படி எட்டியது ? பாரசீகம், அலெக்சாண்ட்ரியா, கர்தோவா, படுவா, பாரிஸ் வழியாக ரைன் பகுதி சென்றது. இதை மேற்கு நாட்டு அறிஞர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

கி. மு 428 — 347ல் கிரீஸ் தேசத்திலே ஓர் அறிஞர் வாழ்ந்தார். அவர் பெயர் பிளாட்டோ என்பது. இவர்

சோக்ரதசின் சீடர்; மாபெரும் சிந்தனையாளர்; தத்துவ மேதை. இவரது சீடர் அரிஸ்டாடில். இந்திய நாட்டின் கருத்துக்களே இவர்தம் சிந்தனையை உருவாக்கியது எனலாம்.

மேற்கு நாட்டுக் கணிதம், இசை ஆகியவற்றின் தந்தை என்று பாராட்டப்படுகிறார் பிதாகோரஸ் என்பவர். இவர் கி. மு. 582ல் வாழ்ந்தவர். இவர் இந்திய நாட்டு அறிஞர்பால் கல்வி பயன்றவர் என்று சொல்லப்படுகிறது. ஜெர்மனியிலே பிறந்து லண்டனிலே வாழ்ந்து நமது உபநிஷதங்களை எல்லாம் ஆங்கிலத்திலே மொழிபெயர்த்த மகாமேதை மாக்ஸ் முல்லரே இப்படிச் சொல்கிறார்.

நமது நாட்டவரான பௌதாயன மகாமுனிவர் அருளிய சுலப சூத்திரங்களிலே ஒன்றுதான் யூக்லிடின் 47வது தீரம் என்று மாக்ஸ் முல்லர் சொல்கிறார்.

எனவே மீண்டும் அந்தச் சிந்தனை இயக்கம் இந்தியா விலிருந்து உலகெங்கும் செல்லத் தொடங்குமானால் அது பற்றி ஆச்சரியம் கொள்ளவேண்டியதில்லை.

அமெரிக்க நாட்டு மாபெரும் சிந்தனைச் சிற்பியாகிய வில் டுராண்ட் கூறுகிறார் :

''இந்தியாவே நமது இனத்தின் தாய். சம்ஸ்கிருதமே ஐரோப்பிய மொழிகளின் தாய். நமது தத்துவங்களின் தாயும் அவளே. அராபியர் மூலம் நாம் பெற்ற கணிதத்தின் தாயும் அவள். கிறிஸ்தவ மதத்தின் உயரிய லட்சியங்களை புத்தர் மூலம் நமக்கு வழங்கிய தாய் இந்தியாவே. கிராம சமுதாய அமைப்பின் மூலம் ஜன நாயக

அரசுக்கு வழி காட்டிய தாயும் இந்தியாவே. எனவே இந்தியத் தாய் நம் எல்லோருக்கும் தாய்.'' ஆனல் அந்தப் பிள்ளைகள் தாய்க்கு நன்றி செலுத்தும் அறிவு இதுவரை பெறவில்லை.

இந்தச் சிறு புத்தகம், என் உள்ளத்திலே ஏற்பட்ட உணர்ச்சிகளையும் தாகத்தையும் அவற்றைத் தணிக்கும் பொருட்டு நான் மேற்கொண்ட யாத்திரையையும் பற்றிக் கூறுவதாகும்.

சுவாமி விவேகானந்தரைப் போலவோ, டாக்டர் ராதாகிருஷ்ணனைப் போலவோ அழகிய ஆங்கிலத்தில் இந்திய வேதாந்த தத்துவங்களைச் சொல்லும் வல்லமை பெற்றேனில்லை. விளம்பரத்துக்காகவும் இதை எழுதவில்லை.

சங்கரர் தாம் வாழ்ந்த 32 ஆண்டுகளில் பன்னிரண்டு ஆண்டுகள் சிருங்கேரியில் வாழ்ந்தார். தொடர்ந்து நீண்டகாலம் அவர் வசித்த ஒரே இடம் இதுதான்.

பெயர் கேட்ட உடனே ஆன்மிக எண்ணங்களை எழுப்பக்கூடிய இடங்கள் சிலவே. சங்கரரின் உள்ளம் கொள்ளைகொண்ட சிருங்கேரி அவற்றுள் மணியெனத் திகழ்கிறது.

ரிஷ்ய சிருங்கர், சங்கரர், சுரேஸ்வராசார்யர், வித்யா சங்கரர், பாரதி கிருஷ்ண தீர்த்தர், வித்யாரண்யர், சந்திரசேகர பாரதி முதலிய மாமுனிவர்கள் வாழ்ந்த இடம் சிருங்கேரி.

இந்திய நாட்டிலே எந்த இடத்திலே இவ்வளவு முனிவர்கள் வாழ்ந்தார்கள் ?

*சிருங்கேரியிலே எத்தகைய வாழ்க்கை இன்னுமிருக்கிறது? மதத்தின் உயிர்த்துடிப்புக்குச் சான்ருக அங்கே என்ன இருக்கிறது என்பதைப் பார்ப்போம்.*

## 2. பிரயாணம்

பங்களூரிலிருந்து புனுவுக்கு மீட்டர்கேஜ் ரயில் பாதை செல்கிறது. அதிலே பங்களூரிலிருந்து 206 கி. மீட்டர் தூரத்திலே உள்ளது கடூர். கடூரிலிருந்து 75 மைல் தூரத்தில் உள்ளது சிருங்கேரி.

ஏப்ரல் மாதத்திலே ஒருநாள் நான், எனது நண்பர், அவரது மனைவி ஆகிய மூவரும் சிருங்கேரிக்குப் புறப்பட்டோம். சென்னையை விட்டுப் புறப்பட்டுப் பங்களூர் வழியாகக் கடூர் சேர்ந்தோம். அப்போது விடியற்காலம் மணி 4-30. கடூர் ரயில்வே ஸ்டேஷன் வெளியே சிருங்கேரி செல்லும் பஸ் நின்று கொண்டிருந்தது. பஸ்ஸிலே கூட்டம் ஏராளம். நாங்கள் ஏறியவுடன் பஸ் புறப்பட்டது. சிக்மகலூரில் நீண்ட நேரம் பஸ் நின்றது. நாங்கள் ஹோட்டலுக்குள் சென்று முகம் கழுவி வந்தோம். அம்மையார் சில பழங்கள் வாங்கினுர். சிக்மகலூரிலிருந்து பிரயாணம் இன்பமாயிருந்தது. தார் ரோடு. இரு மருங்கும் மலைச்சரிவுகள்; வளைவுகள். பச்சைப் பசேல் என்ற காட்சி. ஓடைகள் பலவற்றைக் கடந்து

சென்றது ரோடு. அங்கே கிராமத்துப் பெண்டிர் பலர் தம் துணிகளைத் துவைத்தல் கண்டோம். பஸ் நிற்குமிடங்களில் எல்லாம் பழக்கடைகள், கைவேலைப் பொருள் விற்கும் கடைகள், காப்பிக் கடைகள்! ஓரிடத்தில் சந்திர லாப என்ற வாழைப் பழத்தைக் கண்டு அதிசயத்து நின்றேன். அது மிக ருசியாயிருந்தது. ஆனால் மழைக் காலத்தில் அதை சாப்பிடக்கூடாது என்று ஒரு நம்பிக்கை.

மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஊடே சிக்மகலூர் காடுகளைத் தாண்டிச் சென்றோம். வனவிலங்கு எதுவும் காணப்படவில்லை. குரங்குகள் மட்டும் பல்லைக் காட்டின. மலைகளிலும் சரி, காடுகளிலும் சரி, தோட்டப் பகுதிகளிலும் சரி எங்கும் ஒரே வனப்பு, மனோரம்மியமான காட்சி. பிரயாணம் செய்யும் போதே பற்றற்ற நிலையுண்டு பண்ணும் சூழ்நிலை.

நாங்கள் சென்ற பஸ்ஸில் ஏற்கெனவே அளவுக்கு அதிகமான பேர் இருந்தனர். இருந்தாலும் வழியிலே வண்டியை நிறுத்தி ஏற்றிக்கொண்டு சென்றது அந்தப் புஷ்பக விமானம்.

எனது சிருங்கேரிப் பிரயாணம் மறந்துவிட்ட எனது எண்ணங்களைப் புதுப்பித்துக் கொள்ள ஏற்பட்டது போலாயிற்று. இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு ஒருமுறை நான் அங்கு சென்றதுண்டு. மீண்டும் சிருங்கேரிக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் மட்டும் நாளுக்குநாள் வலுத்துக்கொண்டேயிருந்தது. முதல்முறை நான் சென்ற போது எதிர்பாராத ஒரு வரப்பிரசாதம் கிடைத்தது. அந்த நிலையில் அதை ஏற்று, அதன் பெருமை முழுவதும்

நன்கறியும் திறமை எனக்கில்லாது இருந்தது. எனவே மீண்டும் ஒருமுறை சிருங்கேரி செல்ல வேண்டும் என்ற துடிப்பு எனக்கு ஏற்பட்டது. சிருங்கேரி செல்லாதவரை அத்துடிப்பு ஓயாது போல் தோன்றியது. எமர்ஸன், கிதே, பிராட்லி மாக்ஸ் முல்லர், வால்ட் விட்மன், விவேகானந்தர், ராதாகிருஷ்ணன் ஆகியோர் எனது துடிப்பை மேலும் தாங்க முடியாததாக்கினர்.

ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகர பாரதி மகாஸ்வாமி தமது பூத உடல் நீத்தார் என்று செய்தி கேட்டு இடிந்து போனேன். ஆண்டுகள் உருண்டு ஓட ஓட அந்த துக்கம் மேலும் அலைபோல எழுந்தது. அந்த அலையிலே நான் மூழ்கி வாழ்வை மறந்தேன். எனக்கு அவரே குரு—தர்மத்தின் பேரொளி — தெய்வக்குரல் — பரதத்துவத்தின் பேருருவம். என்னுள்ளே ஆன்ம விளக்கேற்றினர் அவர். நான் வளர்ந்து அவரது பேரருளை உணர்ந்தபோது எனது நன்றியை ஏற்றுக் கொள்ள அவர் பூத உடலில் இல்லை. இந்த நஷ்டம்—நன்றிக்கடன் தீர்க்காதது என்னை மேலும் துயரத்தில் ஆழ்த்தியது. பல ஆண்டுகள் வரை அதனின்று மீளும் வகை காணுதிருந்தேன்.

ஸ்ரீ ஜகத்குரு அபிநவ வித்யா தீர்த்த மகாஸ்வாமி விஜய யாத்திரையின்போது அவரைக் கண்டு வணங்கினேன்; அவரை நெருங்க வழியில்லை. ஏனெனில் எப்போதும் அவரைச் சுற்றிக் கூட்டம். பலமுறை முயன்றேன். தோல்வியுற்றேன். ஆண்டுகள் பல ஓடின. எனது துயர் தீரும் வகையில்லை.

திடீரென்று ஒரு சந்தர்ப்பம். ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் ஏதோ ஒரு கையெழுத்துப் பிரதியைப் பரிசீலித்துக்

கொண்டிருந்தபோது என்னைப் பற்றிய விவரங்களை அறிந்தார். உடனே எனக்கு அழைப்பு வந்தது. இரண்டே நாட்களில் அவரது முகாமை அடைந்தேன்.

ஜகத்குரு அவர்கள் விஜயவாடாவில் தங்கியிருந்தார். கன்யகாபரமேசுவரி சத்திரத்தின் முதல் மாடியில் இருந்தார். காலை 8-30 மணிக்கு எனது நண்பருடன் அங்கு சென்றேன்.

எனது நண்பர் சிறிது பின்னே நின்ருர். அறிமுகமான ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். நான் சத்திரத்துள் புகுந்தேன். மாடிப்படி ஏறினேன். நிமிர்ந்தேன். ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் கீழே இறங்கிஞர். அது கண்டு நான் படிகளை விட்டு இறங்கித் தரையில் நின்றேன். ஜகத்குரு வந்தவுடன் அவர்தம் கால்களில் விழுந்து வணங்கினேன். அவர் என்னை உற்று நோக்கிஞர். எழுந்திருந்த என்னைப் பெயர் சொல்லி அழைத்தார் அவர். யாரும் என்னை அறிமுகம் செய்யவில்லை. எனது நண்பர் ஆச்சரியப்பட்டார். ஆனால் அது எனக்குப் புதிய அநுபவம் அன்று.

ஜகத்குருவின் முகாமில் சில நாட்கள் தங்கியிருந்தேன். ஆயுட்காலம் முழுவதும் பழகியது போன்ற பராமரிப்பு எனக்களித்தார் ஜகத்குரு. என் மனத்தில் அழுத்திக் கொண்டிருந்த துக்கத்தை அவருக்குத் தெரிவித்தேன். அவர் எனக்கு ஆறுதல் கூறிஞர். அவர் சந்நிதியில் ஓரளவு ஆறுதல் ஏற்பட்டது போல் தோன்றியது. அவரது முகாம் வேறு ஊருக்கு நகர்ந்தது. நான் ஊர் திரும்பினேன். துயரம் என்னுடன் வந்தது. சந்திர

கிரகணத்தன்று எழும் கொந்தளிப்பு போல் என்னுள் அந்தத் துயர அலை வீசிக் கொண்டிருந்தது. என்னால் தாங்க முடியவில்லை. மீண்டும் ஜகத்குருவை தரிசித்தாலன்றி எனது துயர் நீங்காதுபோல் தோன்றியது. எனவே அவர் பங்களூரில் விஜயம் செய்திருந்தபோது போனேன். அவரது பாதங்களில் விழுந்து வணங்கினேன். "இங்கு வருவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் அவர் புன்னகை தவழும் முகத்துடன். இது நான் எதிர்பாராதது அன்று. பழக்கப்பட்ட ஒன்றே. மீண்டும் அவருடன் சில நாட்கள் தங்கி இருந்தேன். அவர் சந்நிதியில் எனது துயர் நீங்கப் பெற்றேன். ஜகத் குருவின் முகாம் வேறு ஊருக்குச் சென்றது. நான் எனது ஊர் திரும்பினேன்.

எனது துயரமும் என்கூடவே வந்தது. துயரம் என்று சொன்னால் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. தாங்க முடியாத துயரம். பொறி புலன்கள் எல்லாம் கலங்கின. துயரத்தில் மூழ்கினேன். நெஞ்சு விம்மியது; வெடித்துவிடும் போல் ஆயிற்று. மற்றவர் கண்களை நோக்க அஞ்சினேன்.

இதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகாண முடியாதவன் ஆனேன். சிருங்கேரி சென்று ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகர பாரதி மகாஸ்வாமி அதிஷ்டானம் முன்பு விழுந்து வணங்க வேண்டும் என்ற துடிப்பு உள்ளத்திலே எழுந்தது. சிருங்கேரி செல்ல முடிவு செய்தேன். பாரத தேசத்தின் திசையெங்கும் வெற்றி விஜயம் செய்துவிட்டு ஸ்ரீ ஜகத்குரு அபிநவ வித்யா தீர்த்த மகாஸ்வாமி சிருங்கேரி திரும்புகிறார் என்ற செய்தி கேட்டேன்.

இனி ஒரு கணமும் தாமதிக்க என்ருல் இயலவில்லை. ரயில்வே கால அட்டவணையைப் புரட்டினேன். எனது நண்பர் யுஜிகே வந்தார். ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்துக் கொண்டோம். சுவிஸ் நாட்டு ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் பலநாள் தனி வாழ்வு வாழ்ந்தவர் அவர். இந்தியாவுக்குத் திரும்பும் எண்ணங் கொண்டு விட்டதாக அவர் கூறினர். தென்னிந்தியாவிலேயே ஓர் ஆசிரமம் அமைத்துக் கொள்ள ஏற்ற இடம் தேடிக் கொண்டிருப்ப தாகச் சொன்னர். அந்த இடம் எப்படி இருக்கவேண்டும் என்ருல் அதிக வெப்பமும் கூடாது. அதிக குளிரும் கூடாது. கடலுக்கு அருகிலுங் கூடாது. உயர்ந்த மலைப் பகுதியும் கூடாது. எப்போதும் வற்ருத நீர் உள்ள இடமாயிருக்க வேண்டும். சிநேக பாவத்துக்குப் புகழ் பெற்றதா யிருக்க வேண்டும். போக்குவரவு வசதியிருக்க வும் வேண்டும். இப்படிப்பட்ட ஓரிடம் தேவை என்ருர் அவர். ''சிருங்கேரியே ஏற்ற இடம். ஆன்மீக சக்தி அலைவீசிப் புரளும் இடம் அதுவே'' என்றேன். எனது நண்பர் தலையசைத்தார். ''நான் சிருங்கேரியைப் பார்த்த பிறகுதான் முடிவு செய்ய முடியும்'' என்ருர் அவர்.

''சரி'' என்று சிருங்கேரிக்குப் புறப்பட்டோம். எங்களுடன் வி.டி.கே அம்மையாரும் வந்தார். அவர் அந்நிய நாட்டினர். எனது நண்பரின் நண்பர். இந்தியா வில் உல்லாசப் பொழுதுபோக்க வந்தவர்.

சுற்றுலா மகிழ்வு கருதியோ இயற்கை வனப்பிலே ஈடுபட்டு மகிழவோ நான் சிருங்கேரி போகவில்லை. இழந்த அமைதியை மீண்டும் பெறவேண்டும் என்ற

உறுதி — மறத்துவிட்ட சிந்தனையை மறுபடி நினைவுக்குக் கொண்டுவர — பல ஆண்டுகள் முன்பு இழந்த ஒன்றைத் தேடிப் பிடிக்க — நான் மேற்கொண்ட உறுதி காரணமாக எழுந்த செயலே அது. இப்போது மீண்டும் சிருங்கேரி வந்து விட்டேன். இயற்கை வனப்பு நிறைந்த இடம். நாகரிகத்தின் கால்பட்டுத் தேயாத தனியிடம்.

உலகத்திலே தோன்றும் பெரிய பெரிய மாறுதல்களை எல்லாம் கண்ணாரக் கண்டும், அவற்றிலே சிக்கிவிடாமல், எட்டி நின்று சிந்தை மட்டும் செலுத்துவதற்குரிய வாய்ப்பை சிருங்கேரியின் தனிமை அந்த பீடத்திலே வாழையடி வாழையாக வந்த மாபெரும் துறவிகளுக்கு வழங்கியது. அதுதானே சீரிய வாழ்க்கை! அமைதியாக, அநுதாபத்துடனே, விலகி நின்று மாந்தர் தம் துன்பம் கண்டு கழிவிரக்கம் கொள்ளலும் மதியீனம் கண்டு புன்னகை பூத்தலும் காய்தல் உவத்தல் இன்றி — விருப்பு வெறுப்பின்றி — அவர் காட்டும் பரிவிலே பங்கு கொள்ளலும் அன்றோ துறவு வாழ்க்கை!

பாரத பூமியின் இயற்கை தந்த பொக்கிஷம். மேற்குத் தொடர்ச்சி மலைகளின் காட்சிகளும் துங்கை நதியின் அமைதியான ஓட்டமும், பசுமை நிறைந்த தோற்றமும் மாறவில்லை. சென்ற கால் நூற்றாண்டுகளில் எவ்வித மாறுதலுமில்லை.

# 3. இடமும் மக்களும்

இது ஜெட் யுகம். உலகமெங்கும் ஜெட் விமான யாத்திரை சகஜமாகி விட்டது. ஆனால் இந்திய நாட்டின் பகுதிகள் சிலவற்றிலே இன்னமும் கட்டை வண்டி சகாப்தமே நிலவுகிறது. கடூரிலிருந்து சிருங்கேரி 75 மைல். ஆனால் ஆறுமணி நேரம் பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது.

சிருங்கேரிக்குப் போய்விட்டாலோ நேரம் தூரம் எல்லாம் ஓடி ஒளிந்து விடுகின்றன. சீதோஷ்ண சமநிலை பெற்ற இடம் சிருங்கேரி. ஆன்மிக வாழ்வு முதிர்வதற்கு ஏற்ற இடம்.

மைசூர் ராஜ்யத்திலே காப்பித் தோட்டங்களும் தேயிலைத் தோட்டங்களும் நிறைந்த சிக்மகளூர் ஜில்லாவின் விளிம்பிலே உள்ளதொரு தாலுக்காவின் தலைநகரம் சிருங்கேரி. பெரிய பெரிய உணவு விடுதிகளோ, லாட்ஜிங் விடுதிகளோ அங்கு காணமுடியாது. ஆனால் சிருங்கேரி மடத்து நிர்வாகம் உங்களை உள்ளன்புடன் வரவேற்கிறது. ஸ்நான வசதியுடன் கூடிய சுத்தமான அறைகள். சம்பிரமமான சாப்பாடு. பணம் கொடுக்க வேண்டுவதில்லை.

எவ்விதமான கவலையுமில்லாமல் மடத்தின் விருந்தினனாக சிருங்கேரியில் சிலநாள் இருந்தால் போதும். அது உங்களைப் பெரிதும் மாற்றிவிடும். நீங்கள் பெரிதும் மேம்பாடுற்றவராய், மகிழ்ச்சி பெற்றவராய் ஊர் திரும்புவீர்கள். சிருங்கேரி ஒரு முனிசிபல் நகரம்தான். இருந்தாலும் நவீன நாகரிகம் அந் நன்னகரைப் பாழாக்கவில்லை.

சரித்திர பொக்கிஷம் நிறைந்த இடம் சிருங்கேரி. வேத வேதாந்தப் பயிர் விளைக்கும் பண்ணை. எண்ணரிய தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்துத் தலைநிமிர்ந்து நிற்கும் கலாசாரமுடையது.

சென்றுபோன நாட்களிலும் சரி, இனி வரப்போகும் நாட்களிலும் சரி இதைப் போன்றதொரு சாம்ராஜ்யத்தைக் காணல் இயலாது என்று வியக்கத்தக்க விஜயநகர சாம்ராஜ்யம் தோன்றக் காரணமாயிருந்த வித்யாரண்ய மகாமுனிவர் வாழ்ந்த இடம் சிருங்கேரி.

விஜயநகர சாம்ராஜ்யப் பெருமையை இந்த நாடு இன்னமும் மறக்கவில்லை. அந்த சாம்ராஜ்ய நினைவு கவினுறும் துங்கை நதிக் கரையளவில் நின்றுவிடவில்லை.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர் சிருங்கேரியிலே பன்னிரண்டு ஆண்டுகள்தான் இருந்தார் என்றோ பல நூற்றாண்டுகள் முன்பே மறைந்தார் என்றோ சிருங்கேரி வாழ் மக்கள் நினைக்கவில்லை.

துங்கை நதியும் அதன் இனிய காற்றும், வானோங்கி வளர்ந்துள்ள காடுகளும், பசுமை பரக்கக் காட்சி தரும் உயர் சிகரக் குன்றுகளும் ஸ்ரீ சங்கர பகவத் பாதரின் பெருமையை ஓதக் காண்பீர்கள்.

இந்திய நாட்டின் மிகச் சிறந்த செல்வமாகிய அத்யாத்ம தர்மம் இங்கேதான் பாதுகாக்கப்படுகிறது. பரம்பரை பரம்பரையாகப் பேணி வளர்க்கப்படுகிறது.

அந்த க்ஷேத்திரத்தின் பெருமைமிகு மெஞ்ஞானம் ஆன்மிக நேயர்களையும், கலாசாரப் பண்புடையோரை

யும் தன்பால் ஈர்த்து வழிகாட்டி அருள்கிறது. அந்த மகோன்னதமும், லாவண்யமும், அருள் சுரக்கும் பெரு நோக்கும் இந்திய நாட்டின் ஆன்மிக வரலாற்றிலே எதிரொலி செய்கின்றன, இந்த மலைகளிலேதான் மாபெரும் முனிபுங்கவர்கள் தங்கள் ஆசிரமங்களை அமைத்துக்கொண்டு தலைமுறை தலைமுறையாக ஆன்மிக அருள் மழை பொழிந்திருக்கிறார்கள்.

சிருங்கேரி வாழ் மக்கள் ஜகத்குரு சேவைக்கே தங்களை அர்ப்பணம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ வித்யாரண்யர் காலத்துக்கு முன்பிருந்தே தங்கள் முன்னோர்கள் இந்த சேவை செய்து வந்ததாக அவர்களில் பலர் பெருமை கொள்கிறார்கள். அவர்களுடைய தினசரி சேவையிலும், அவர்களுடைய நடையுடை பாவனைகளிலும் இன்னும் இன்னோரன்ன பல வகைகளிலும் அவர்களுடைய பெருமிதம் பிரதிபலிக்கிறது.

பிரதேச மொழி கன்னடம். அதுதவிர ஓரளவு சம்ஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, தமிழ், இங்கிலீஷ் முதலிய எல்லா மொழிகளும் பலர் பேசுகின்றனர். வீடுகள் வசதியானவை. இரண்டடுக்கு மாடி உள்ளவை. பருவ மழையின் வேகத்தைத் தாங்கும் வகையில் கட்டப்பட்டுள்ளன. வீட்டிற்குப் பின்புறத்தில் பெரிய கொல்லை. தென்னை, வாழை முதலிய மரங்களும் காய்கறித் தோட்டமும் உண்டு. இடை இடையே சில பாக்கு மரங்கள். ஒவ்வொரு வீட்டிலும் சில பசுக்கள். குள்ளமான கறுநிறப் பசுக்கள். துடிதுடிப்பும் ஆரோக்கியமும் மிக்க பசுக்கள்.

பள்ளிக்கூடங்களுக்கு விளையாட்டு மைதானங்கள் இல்லை. வருஷத்தில் ஆறு மாதம் விடாமழை பொழியும். ஆதலால் விளையாட நேரம் இராது. மீதியுள்ள ஆறு மாதம் படிப்பிலும் பரீட்சையிலுமாகச் சென்றுவிடும். ரிஷ்ய சிருங்கர் இருந்த இடமல்லவா! மழை பெய்யக் கேட்பானேன்!

ஆடம்பர வாழ்வு வாழ்வதற்கு வழி செய்யும் நவீன ஆங்கிலக் கல்வியின் கவர்ச்சி ஒருபுறம் இருப்பினும் பழைய முறையில் வேதமும் சம்ஸ்கிருத பாடமும் கற்பிக்கும் குருகுல பாடசாலையில் ஏராளமான பேர் படிக்கின்றனர்.

கால் நூற்றுண்டுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது அதிகமான மக்கள் சிருங்கேரியில் வாழ்கிறார்கள். அந்த நாளிலே ரோடுகள் இல்லை. இப்போது தார் ரோடுகள் உள்ளன. தபாலாபீஸ், தந்தி ஆபீஸ், டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜ் முதலிய எல்லாம் வந்துவிட்டன. மின்சார விளக்குகள் எரிகின்றன. குடி தண்ணீர்க் குழாய்கள் காட்சி தருகின்றன.

நீண்டதொரு கடைவீதி. உடுப்பி காப்பிக் கடைகள் சில. துணி வெளுத்துத் தரும் கடைகள் சில. முனிசிபாலிடி ஆபீஸ். சிண்டிகேட் பாங்கு, ஓர் உயர்நிலைப்பள்ளி. பஸ் ஸ்டாண்டு இவைதான் சிருங்கேரியின் நவீன வசதிகள்.

படித்தோர் வேலையில்லாமை அங்கில்லை. எல்லாரும் திருப்தியுடனிருக்கின்றனர். சமூக அரசியல் மாறுதல்

வேண்டுவோர் எவருமிலர். தேர்தல் பரபரப்பும், அரசியல் கொந்தளிப்பும் அந்த இடத்தின் முனையைக்கூட எட்டவில்லை.

சிருங்கேரியிலே ஆன்மிக காரியங்களில் அதிகாரம் செலுத்துவது கிடையாது. ஜனநாயக உணர்ச்சிக்கே முதலிடம். ஜகத்குரு பாரம்பரியம் என்பது குடும்பச் சொத்து அன்று. உறவு முறை என்ற காரணத்தாலோ வேறு எந்தக் காரணம் கொண்டோ பீடாதிபதிகளைத் தேர்ந்தெடுப்பது இல்லை. பீடத்தை அலங்கரிக்கும் தகுதி உடையவர் [எவரோ அவரே பீடாதிபதியாகத் தேர்ந் தெடுக்கப்படுவார். தகுதி வாய்ந்ததவர்களே சிருங்கேரி பீடத்தை அலங்கரித்து வந்திருக்கிறார்கள்.

தற்போதைய பீடாதிபதி எதிர்பாராத முறையில் இளம் வயதிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார். சிறு வயது முதலே ஆங்கிலத்தின் மீது வெறுப்பு. பல ஆண்டு கள் தமது குருபாதங்களில் சேவை. கல்விப் பயிற்சி. தமது குருநாதர் பூத உடல் நீத்தபோது வருந்தியது — பாரத தேசம் முழுவதும் விஜய யாத்திரை செய்து வெற்றிக் கொடி நாட்டித் திரும்பியது இவை யாவும் நாடறிந்த விஷயம்.

அவரது திறமை, அறிவாற்றல், திண்மை முதலியன பற்றிய பல்வேறு சம்பவங்களை பக்தர் குழாம் நன்கு அறியும்.

எளிமை, தன்னடக்கம், உள்ளன்பு முதலிய யாவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் அவர். விஜய யாத்திரை

யின்போது லக்ஷோப லக்ஷம் மக்கள் வந்து அவரை வணங்கினுர்கள். சாதாரண ஏழைக் குடியானவர் முதல் இந்த நாட்டின் ஜனுதிபதி வரை எல்லோரும் வந்து அவரை தரிசித்தனர். ஒவ்வொருவரையும் அவரவர் தம் நிலைக்கேற்ப வரவேற்று விசாரித்துப் பேசி புன்முறுவல் பூத்து அவர் அனுப்பிய முறையும் பிறவும் அவரது எளிமையையும் திறமையையும் அறிவாற்றலையும் நன்கு காட்டின. அவரது புன்முறுவல் பூத்த தோற்றம், பரிவு முதலியன மக்களைப் பரவசப்படுத்தின. அவர்பால் சென்று உரையாடித் திரும்புவோர் ஒவ்வொருவரும் முன்னிலும் பன்மடங்கு அறிவு விளக்கம் பெறுவர்.

சங்கர பகவத் பாதருக்குப் பின் பல நூருண்டுகள் கழித்துத் தற்போதைய சிருங்கேரி ஜகத்குரு நாடு முழுவதும் விஜய யாத்திரை செய்துள்ளார். புது டில்லியிலே அவர் முகாம் செய்தபோது ஜனுதிபதி டாக்டர் ஜாகீர் உசேன் வந்து வணங்கினுர். ராஜரிஷி டாக்டர் ராஜேந்திர பிரசாத், பிரும்ம வித்யா பாஸ்கர டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலியோரும் ஜகத்குருவுடைய ஆசி பெற்றவர்களே. காஷ்மீரத்திலும், நேபாளத்திலும் நமது ஜகத்குருவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு சங்கர பகவத் பாதரின் விஜயத்தை நினைவூட்டின.

இவரது விஜயத்தால் இந்திய நாட்டின் தார்மீக, ஆன்மீக எண்ணங்கள் புத்துயிர் பெற்ருலும் பெரு விட்டாலும் ஒன்று நிச்சயம். அதாவது இந்திய நாட்டின் தற்கால சரித்திரத்திலே முக்கியத்துவம் பெற்று விளங்கும்.

வேதாந்தப் பயிர் வளரும் பண்ணையே சிருங்கேரி. மனிதனின் உயரிய சிந்தையின் எடுத்துக்காட்டு. கால வெள்ளத்தில் கரைந்து போகாத ஒன்று. நுனிப்புல் மேய்வோருக்கு அங்கே இடமில்லை. அற்பருக்கும் இடமில்லை.

பல நூறுண்டுகளாக அங்கிருந்து வழி காட்டும் ஆத்ம சக்தி எத்தகையது என்று அறிவதற்கு அவ்விடத்தையும், அம்மக்களையும் பற்றித் தெரிந்து கொள்வது உறுதுணை புரியும்.

இந்திய நாட்டிலே ஆத்மிக சிந்தனை அழியவில்லை. அதனுல்தான் ஒரு பரஹம்சரும் ஒரு ரமணரும், ஓர் அரவிந்தரும் இந்த நாட்டிலே தோன்றுகின்றனர்.

சிருங்கேரி சாரதா பீடம் இந்தியர் வாழ்க்கையிலே, பண்பிலே, கலாசாரத்திலே விளங்குகிறது. இந்தியர் சிந்தையிலே, இந்திய தத்துவத்திலே முதன்மை பெற்று விளங்குகிறது. ஒவ்வொரு வகையிலும் நிலைபெற்று விட்டது.

## 4. ஆலயங்களைச் சுற்றி

அரசாங்க விளம்பர இலாகாவோ, வழிகாட்டிகளோ புகாத இடம் ஒன்று உண்டு என்ருல் அது சிருங்கேரி தான். இவர்களுடைய தொந்தரவு இல்லாமல் எல்லா இடங்களையும் சிருங்கேரியில் காணமுடியும். விளம்பர யுக்தி எதுவும் சிருங்கேரியில் கையாளப்படவில்லை. எழுத்துக் கூலிகளை ஏற்படுத்தி புகழ்பாடச் சொல்வதுமில்லை.

பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி கொடுக்கும் வழக்கமும் இங்கில்லை. ஜகத்குரு தமது வேலையை அதிகாலையில் பிரும்ம முகூர்த்தத்தில் தொடங்கி இரவு பத்து மணிக்கு முடிக்கிறார். அதற்குப் பிறகு எவருடனும் பேசுவது இல்லை. பகல் 11 மணி முதல் 12 மணி வரை கொஞ்சம் அவகாசம் உண்டு அப்போது மௌனம் இல்லையானால் பேசுவார். மாலை 5 மணி முதல் 6 மணி வரை சிறிது ஓய்வு உண்டு. அப்போதும் பேசுவார்.

பத்திரிகை நிருபர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர் கள் எல்லாரும் விருந்தினராக கௌரவிக்கப் படுகிறார்கள். அவர்கள் நன்கு உபசரிக்கப் படுகிறார்கள்.

சிறியனவும் பெரியனவுமாக சுமார் 100 கோயில்கள் சிருங்கேரியைச் சுற்றி உள்ளன. அவை எல்லாம் நல்ல நிலைமையில் உள்ளன. கோயில் பூஜைகள் ஆகம சாஸ் திர முறை வழுவாது நடைபெறுகின்றன.

சாரதா தேவி ஆலயம், சங்கர பகவத் பாதர் ஆலயம், மலஹானிகரேசுவர ஆலயம், வித்தியா சங்கரர் ஆலயம் முதலியவை மிக முக்கியமானவை.

சநாதன தர்மமும், இந்து மதமும் இந்நாட்டில் இன் னும் மறையாதிருப்பதற்குக் காரணம் கோவில்களே. வேத தர்மத்துக்குப் புறம்பானவைகளைக் களைந்து எறிந்து வேதநெறி எங்கும் ஓங்கச் செய்தார் சங்கர பகவத் பாதர். அவர் ஏற்றிய விளக்கு இன்னும் ஒளி வீசிக் கொண்டிருக் கிறது. அவரது தன்னிகரற்ற வேதாந்த வெற்றியும், அவரது இலக்கியச் சுரங்கங்களும் சிருங்கேரி ஆலயங்

களில் காட்சி தருகின்றன. சங்கரரின் சாதனை எவ்வளவு மகத்தானது என்பதை அறியாமல் ஒருவன் ஹிந்து என்று பெருமைப்பட்டுக் கொண்டால் அதற்கு அர்த்தமே இல்லை. உலகின் எந்த நாட்டிலும் சரி, எந்தக் காலத்திலும் சரி, தோன்றிய தத்துவ மலர்களிலே சிறந்த மலர் அவர். அவருக்குப் பின் வந்தவர்கள் அந்த மரபு வழுவாமல் காத்து வருவதை சிருங்கேரி ஆலயங்களில் காணலாம்.

நவீன நாகரீகம் தீண்டாத பண்டித விற்பன்னர்களால் — எளிய, கள்ளமற்ற — தெய்வபக்தி மிக்கவர்களால் இவை நிர்வகிக்கப்படுகின்றன.

ஆலயங்கள் தெய்வ சாந்நித்யம் பெற்றவை; ஆகம விதிப்படி யந்திர நிர்மாணம் செய்யப்பட்டவை. விதி முறை வழுவாது பூஜை செய்து வந்தால் வருஷம் ஏற ஏற தெய்வ சாந்நித்யம் பெருகும்.

மனிதர் தம் மனோநிலைக்கு ஏற்ற வகையில் பல்வேறு கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. பல்வேறு மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அமைதியான சுபாவம் உடைய ஒருவருக்கு பிரதாப வீர ஆஞ்சநேயர் கோவிலில் ஈடுபாடு வராது. தக்ஷிணாமூர்த்தி மீதோ, ராமன் மீதோ, சிவன் மீதோதான் ஈடுபாடு ஏற்படும். பல்வேறு தீர்த்தங்களில் பல்வேறு மூர்த்திகள் உள்ளன. ஒவ்வொரு தீர்த்தமும் ஒரு குண விசேஷச் சிறப்புடன் விளங்கும். ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒரு சிறப்புண்டு. அவ்வாறு சிறப்புப் பெற்ற மூர்த்திகள் மக்களின் ஆன்மிக உணர்வைத் தூண்டும். பாடல் பெற்ற ஸ்தலங்கள் எல்லாம் இம்முறையில்தான் அமைந்துள்ளன. நூற்றுக்கணக்கான ஆண்டு

கள் பூஜித்தால் அவை மேலும் தெய்வ சாந்நித்யம் பெற்று விளங்கும்.

ஒருவன் தனது மனோ நிலையை நன்கு அறிந்து அதற்கேற்பத் தன் இஷ்ட தேவதையைத் தெரிந்து கொள்ள வேண்டும். இஷ்ட தேவதா உபாசனை என்ன செய்யும்? ஆன்மிக வழியில் ஏற்படும் இடையூறுகளை நீக்கும் வழி காட்டும். க்ஷேத்திராடனம் செய்வது எதற்கெனில் மன அமைதி பெறுவதற்கே. தீர்த்தச் சிறப்பும், மூர்த்திச் சிறப்பும் பெற்ற க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்யும்போது அந்தத் தீர்த்தமும் மூர்த்தியும் ஆன்மிக உணர்வைத் தட்டி எழுப்பி மன அமைதி கொடுக்கும்.

இப்படியாக ஒவ்வொரு விதத்தில் மூர்த்திச் சிறப்பும் பெற்று விளங்குகின்றன. ஆனால் சிருங்கேரியிலோ எல்லா மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சிருங்கேரி சென்றால் எல்லா மூர்த்திகளையும் தரிசனம் செய்யலாம்.

இதர க்ஷேத்திரங்களிலே என்ன காணலாம்? பஞ்ச பூதங்களில் ஏதேனும் ஒன்றே சிறப்புற்று விளங்கக் காணலாம். ஆனால் சிருங்கேரியிலோ அந்தப் பஞ்ச பூதங்களும் சிறப்புற்று விளங்குகின்றன.

சங்கர பகவத் பாதர் மலைப் பாறையிலே ஸ்ரீ சக்ரம் வடித்தார். அதன்மீது சந்தண மரத்தால் செய்யப்பட்ட சாரதாதேவி வடிவத்தைப் பிரதிஷ்டை செய்தார். இந்த சாரதாதேவி ஆலயம், சாரதா பீடம் எவ்வளவு பழைமை யானதோ அவ்வளவு பழமையானது ஆகும். இந்த தேவியின் ஆலயம் மரத்தால் ஆனது. இந்த நூற்றாண்

டின் தொடக்கத்தில்கூட அப்படித்தானிருந்தது. சந்தன மரத்தில் வடிக்கப்பட்ட சாரதாதேவி உருவம் ஸ்ரீ வித்யாரண்யர் காலத்தில் தங்க விக்கிரகமாக வடிக்கப் பட்டது. 1791ல் இந்த தங்க விக்கிரகம் கொள்ளையடிக்கப் பட்டது. அப்போது மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் இதுகேட்டு வருந்தினர். மற்றொரு தங்க விக்கிரகம் செய்ய வேண்டி பொன் கொடுத்தார். ஸ்ரீ சச்சிதானந்த பாரதி III ஜகத்குருவா யிருந்தபோது இந்த விக்கிரகம் செய்யப் பட்டது.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்திலே ஸ்ரீ சச்சிதா னந்த சிவ அபிநவ நரசிம்ம பாரதி இந்தக் கோயிலை கருங்கல் கொண்டு கட்டினுர். 1916ல் இந்தப் புதிய கோயில் கும்பாபிஷேகம் ஸ்ரீ ஜகத்குரு சந்திர சேகர பாரதி மகாஸ்வாமியால் செய்யப்பட்டது. தற்போதைய ஜகத்குரு பீடம் ஏறியபின் ராஜகோபுரம் கட்டப்பட்டது. இந்தக் கோவில் பிரகாரத்திலே சக்தி கணபதிக்கும் புவனேசு வரிக்கும் சந்நிதிகள் உள்ளன. மண்டபத்திலே ராஜ ராஜேசுவரிக்கும் மகிஷாசுர மர்த்தனிக்கும் சிலைகள் உள்ளன.

கர்ப்பக்கிரகத்தில் உள்ள சாரதாதேவி பிரம்மவித்தை ரூபியாக இருக்கிருள். பிரக்ஞான கணரூபியாக இருக் கிருள். அதாவது உலகெலாம் ஈன்ற அன்னை. கையிலே அமுத கலசம், ஜபமாலை, புத்தகம், சின்முத்திரை இவ் விதம் காட்சி தருகிருள் அன்னை.

அத்வைதப் பிரசாரத்தின் பொருட்டு சங்கரர் ஏற் படுத்திய முதல் பீடம் சிருங்கேரியாதலால் அங்குள்ள

கோவில் ஒவ்வொன்றிலும் சங்கரருக்கு விக்கிரகம் இருக்கக் காணலாம்.

சங்கரருக்கு என்று ஓர் ஆலயம் உள்ளது. அங்கே சங்கரருக்கு வெண்கலச் சிலை இருக்கக் காணலாம். யோகாசனத்தில் அமர்ந்து சின்முத்திரையும் அபயகரமும் கொண்டு விளங்குகிறார் சங்கரர்.

சிருங்கேரி நகரின் மத்தியிலே ஒரு சிறு குன்றின்மீது உள்ளது மலகணிகேஸ்வரர் ஆலயம். ரிஷ்ய சிருங்கரின் தந்தையாகிய விபந்தகர் பூத உடலுடன் மறைந்த இடத்தில் கர்ப்பக்கிரகம் உள்ளது. விஜயநகர சிற்ப ரீதியில் அமைந்துள்ள கோயில் இது. 1621ம் ஆண்டில் இந்தக் கோயில் பழுது பார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. வேணுகோபாலர், சண்முகர், ராமர், துர்க்கை காளிங்க நடனம், கிருஷ்ணர், அநுமான், வீரபத்திரர், நரசிம்மம், சந்திரன் ஆகியோருக்கு பிம்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கோயிலிலே கவனிக்கத்தக்கது எது என்றால் ஸ்ரீ அபிநவ நரசிம்ம பாரதிஸ்வாமி (1599—1622) வரைந்த கணபதி உருவம்தான்.

சிருங்கேரியின் மிகச் சிறந்த கோவில் எது என்றால் வித்யா சங்கரர் ஆலயமே. விஜயநகர சாம்ராஜ்யத்தின் தொடக்க நாளிலே (1338) இந்த ஆலயம் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. விஜயநகர, ஹோய்சாலா முறையில் இருக்கிறது இந்த ஆலயம். துங்கை நதியின் தென் கரையிலே ஸ்ரீ சக்ர வடிவில் கம்பீரமாக அமைந்துள்ளது இந்த ஆலயம். இந்த ஆலயத்திலே வித்யா சங்கரர் தவிர இன்னும் ஐவருக்கு சந்நதிகள் உள்ளன.

வித்யா கணபதி, தக்ஷிணாமூர்த்தி, பிரம்மா சரஸ்வதி, லக்ஷ்மி நாராயணன், உமா மகேசுவரன்.

இந்த ஆலயத்தின் கிழக்கு மண்டபத்திலே உலகமே அதிசயிக்கும் ராசித் தூண்கள் உள்ளன. மேஷம், ரிஷபம் முதலிய 12 ராசிகளுக்கும் 12 தூண்கள். ஒவ்வொரு தூணிலும் அந்த அந்த ராசியின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் அந்த அந்த ராசிக்குரிய தூணில் சூரியனின் கிரணங்கள் விழும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் சிற்பச் சிறப்பு இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது.

## 5. மீண்டும் வந்த பழைய நினைவு

இம்முறை சிருங்கேரிக்குப் போன உடனே ''சங்கர கிருபா''வில் ஓர் அறை கிடைக்கப் பெற்றேன். ''சங்கர கிருபா'' என்ற பெயர் என்னைச் சிந்தனையில் ஆழ்த்தியது. எனது சட்டை முதலிய சுமைகளைக் களைந்து எறிந்து விட்டு ஸ்நானம் செய்வதற்காக ஆற்றங்கரை நோக்கி வேகமாக ஓடினேன். வழியிலே இருந்த சாரதா தேவி ஆலயம், வித்யா சங்கரர் ஆலயம் ஆகியவற்றின் முன்னே கை கூப்பியவாறே கடந்து சென்றேன்.

இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு நான் சிருங்கேரிக்குப் போனபோது எத்தகைய புறக் காட்சிகளைக் கண்டேனோ அவற்றிலிருந்து அதிகம் மாறுபடாத காட்சியே கண்டேன்.

சாரதாதேவி ஆலயத்திள் ராஜகோபுரம் ஒன்று தவிர வேறு எவ்வித மாறுதலும் இல்லை.

முன்பு போலவே அந்த நதி அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. எவ்வித பங்கமும் இல்லாமல் மீன்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. மீன் காட்சிச் சாலையோ என்று ஐயுறும் வண்ணம் அந்த ஆற்றின் தெள்ளிய நீர் தோற்றமளித்தது.

பசுமையான பின்னணியிலே தோன்றிய அந்த மரப் பாலம் இப்பொழுதும் இருந்தது. ஆனால் சிறிது இடம் மாறியிருந்தது.

நாற்புறமும் சூழ்ந்துள்ள மலைகளிலே ஓங்கி வளர்ந்து வரிசை வரிசையாக நின்ற மரங்கள் அதே பழைய காட்சி வழங்கின. மாறுதல் இல்லை.

அமைதியான அந்த ஆற்றின் தோற்றமும், கம்பீர மாக நிற்கும் அந்த மலைகளின் காட்சியும் என்னைக் குலுக்கின; எலிவளை வாழ்க்கையினின்று எழுப்பின; நீண்ட காலமாக மறந்துவிட்ட விரிந்து பரந்து அகண் டாகாரமாய் விளங்கும் லக்ஷிய வாழ்வெனும் மண்டப வாயிலுக்கு உந்தித் தள்ளின.

சமூக சூழ்நிலையிலிருந்து விடுபட்ட உணர்ச்சி என்னை ஆட்கொண்டது. சமூகத்தின் ஆபாச—கீழ்த்தர—அற்ப உணர்ச்சிகள் எல்லாம் மறைந்தன; மங்கின; முற்றும் நீங்கின.

உள்ளத்திலே உறைந்து கிடந்த திருப்தி மனப் பான்மை திடீரென்று தலை காட்டியது. அந்தச் சூழ்நிலை

யில் நிலவும் ஆன்மிக பாரமார்த்திக உணர்ச்சியில் நானும் ஒன்றினேன். புதியது எதுவுமில்லை; பழக்கமில்லாதது எதுவுமில்லை. உயிர்த்துடிப்புடன் கூடிய அந்தச் சூழ் நிலையிலே எதையும் உய்த்துணரும் உணர்ச்சியே பெருக் கெடுத்து ஓடியது.

நீரிலே மூழ்கியது அந்த நினைப்பிலே விளைந்த மாறுத லைப் பூர்ணமாக்கியது. அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப இசைந் தேன். தலைமுறை தலைமுறையாக அங்கேயே வாழ்ந்த வன் போல் ஆனேன்.

நரசிம்ம வனம் புகுந்தேன். அந்த இடத்தைச் சேர்ந்தவன் போல. ஏதோ ஒரு சக்தி என்னை உந்தித் தள்ளியது.

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி மகா சுவாமியின் அதிஷ்டானத்தை அடைந்தேன். பூத உடலில் அவர் காட்சி தரவில்லை. எனினும் அகத்தே நிகழும் ஆன்மிக அதிர்ச்சி மூலம் அவர் இருப்பது உணர்ந்தேன். எனக்கு இறைவழி உணர்த்தியவரும், தமது தெய்வீக அமைதி யால் எனது தெய்வ விடாய் தீர்த்த தெய்வீக ஊற்றும் பொலிவிற் சிறந்தவரும், பூரணமாய் விளங்கியவரும், முற்றுப் பெற்றவரும் ஆகிய எனது குருவின் அதிஷ்டான யாத்திரை முடிந்தது.

மூர்த்தி, லிங்கம் ஆகியவற்றின் முன் தாளும் தடக் கையும் கூப்பித் தரையில் வீழ்ந்து வணங்கி அவற்றை உற்று நோக்கியவாறு எதிரே அமர்ந்தேன். எனது சூழ் நிலையை மறந்தேன். தெய்வீக உணர்ச்சியால் ஆட்

கொள்ளப்பட்டேன். எனது குரு—எனது இறையுணர்த்திய அருட்சுனேயின் அருகிலிருப்பதை உணர்ந்தேன்; அநுபூதி பெற்றேன். சொற்களால் விவரிக்க முடியாததொரு அமைதி என்னுள்ளே என் உடலில் புகுந்து பரவச நிலைக்கு உயர்த்தியது; உந்தியது.

மீண்டும் சுய உணர்வு பெற்றபோது இதற்கு முன் முறை வந்ததைப் பற்றி எண்ணலானேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலிருக்கும். அப்போது எனக்கு வயது இருபதுதானிருக்கும். தந்தை இறந்தார். குடும்பமோ பெரிது. சம்பாதித்துக் குடும்பத்தைக் காக்க வேண்டிய நிலை. பல்கலைக் கழகப் படிப்பு, பட்டம், வாழ்க்கையின் உயர் மதிப்புகள் பற்றிய எல்லாச் சிந்தனைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வாழ்க்கையில் ஈடுபட்டேன்.

வாழ்வின் புதிய சுமைகளையும், துக்கத்தையும் தாங்கிக் கொண்டிருந்த ஆரம்ப நாட்கள் அவை. வெள்ளையனே வெளியேறு என்ற போராட்டத்தின் எதிரொலி எங்கும் கேட்டது. நாட்டிலே எங்கும் குழப்பம். யுத்தத்தின் எதிரொலி எங்கள் வாசலில் கேட்டது.

வயிற்றுப் பிழைப்புக்கு ஏதாவது ஓர் உத்தியோகம் செய்தாக வேண்டும் என்ற நிலை. உள்ளூரிலே செய்த முயற்சி எதுவும் பயன்தரவில்லை. பங்களூருக்குப் போனால் வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். உடனே ரயிலேறினேன். பங்களூர் சென்றேன். வேலை தேடினேன். வெற்றி.

பங்களூரில் குடியேறினேன். தினசரி வேலைகளில் ஈடுபட்டேன். விடியற்காலை 5 மணிக்கு முன்பே எழுந்திருப்பேன். காலைக் கடன்களை முடிப்பேன். குளிர்ந்த நீரில் தலை மூழ்குவேன். காலை சந்தியாவந்தனத்தை முடித்துவிட்டு அவசர அவசரமாக டிபன் சாப்பிட்டுவிட்டு எனது சைகிளில் ஏறி அந்த மார்கழி மாதத்துப் பனியிலே நடுக்கும் குளிரிலே பறப்பேன்.

ஒரு சிறு வீடு. அந்த வீட்டின் முன் தாழ்வாரத்திலே ஒரு சிறு அறை. அதிலே குடியிருந்தேன். கன்னட பிராமணர் ஒருவர் அந்த வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தார். அவர் ஒரு பாங்கிலே உத்தியோகம் வகித்து வந்தார். வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். வழுக்கை விழுந்த தலை. அமைதியான தோற்றம். அதிலே ஒரு ஏமாற்றம் நிறைந்த பார்வை. ஒருகால் அது பிள்ளைகுட்டி இல்லாததால் ஏற்பட்ட ஏமாற்றமோ என்னவோ? அந்தப் பெண்மணி வயதில் இளையவர்போல் காணப்பட்டாள். எனினும் தலை நரைத்து இருந்தது. அன்பான உள்ளம். சுலபத்தில் இளகிவிடக்கூடிய தாய் மனம்.

நான் அந்த வீட்டில் குடிபுகுந்து ஒரு வாரம் முடியவில்லை. தினமும் விடியற் காலையில் எழுந்து அந்தக் குளிரில் நான் தண்ணீரில் குளிப்பதை அந்த அம்மாள் கவனித்தாள். எனது வளர்ப்புத் தாயானாள். குளிர்ந்த நீரில் குளிப்பது நின்றது. வெந்நீரில் குளிக்கத் தொடங்கினேன். அடிக்கடி அவர்களுடன் சாப்பிடத் தொடங்கினேன். நான் வேறு அவர்கள் வேறு என்று வெளியாருக்குத் தெரியாது. அன்புப் பெற்றோரும் அருமை மகனும் போல் ஆனோம்.

கிறிஸ்மஸ் விடுமுறை வந்தது. அவர் உத்தியோக நிமித்தமாக பத்ராவதி போக நேர்ந்தது. அந்த அம்மணியும் உடன் சென்றார். என்னையும் வருமாறு அழைத்தனர். பத்ராவதியில் சிலநாள் தங்கியபின் சிருங்கேரி சென்று திரும்ப முடிவு செய்தனர்.

பத்ராவதியிலிருந்து ஷிமோகா சென்றோம். சிவமொக்கா என்று மருவி வழங்கப்படும் ஷிமோகா மலைநாட்டிலே பிற்போக்கானதொரு பழைய நகரம். அங்கிருந்து கொப்பா வழியாகச் சிருங்கேரி சென்றோம். கொப்பா என்பது தாலுக்காவின் தலைநகர். இப்பொழுது அதை நினைத்துப் பார்க்கிறேன். விதி எவ்வளவு வேகமாக என்னை அங்கே உந்தித் தள்ளியிருக்கிறது! வருஷத்தின் முடிவிலே மாரிக் காலத்தின் இறுதியிலே ஒரு நாள் மாலை சிருங்கேரிக்குக் கொண்டு சேர்த்தது.

பழைய தர்மசாலையிலே ஓரிரண்டு அறைகள் எங்கள் உபயோகத்துக்குக் கொடுக்கப்பட்டன. அதிலே நீண்ட நேரம் தங்கியிருக்கவில்லை. மடத்துக் கட்டிடங்களையும் துங்கை ஆற்றையும் சுற்றிப் பார்க்கலாம் என்று வெளியே புறப்பட்டோம். ஆற்றின்மீது அழகிய காட்சி தந்தது மரப்பாலம். அந்தி மாலையின் அழகிய பின்னணியிலே உள்ளம் கொள்ளை கொண்டது. சூரியன் மேற்குப்புறமாக மலைவாயிலில் இறங்கிக் கொண்டிருந்தான். துங்கா நதியின் மெல்லிய இசையினூடே மெல்லென வந்து கொண்டிருந்தது மாலை. பாலத்தின் மீது ஏறினேன். கீழே நோக்கினேன். நீரிலே நீந்தி விளையாடிய மீன்களைப் பார்த்தேன். சுற்றிலும் காட்சி தந்த மலைகளின் விளிம்பு

களை நோக்கியவாறு நடந்தேன். மெதுவாகப் பாலத்தைக் கடந்தேன். அமைதியான அந்த அந்திப் பொழுதிலே நரசிம்ம வனத்துள் புகுந்தேன். எனது வளர்ப்புப் பெற்ளேர் பின்னே சிறிது தூரத்தில் வந்தனர்.

எதிர்பாராத ஓர் உணர்ச்சி—இன்னதென்று விவரிக்க முடியாத ஓர் உணர்ச்சி—எனது உள்ளத்தின் அடித் தளத்தினின்று தோன்றியது.

நரசிம்ம வனம் ஓர் அழகிய சூழ்நிலையிலே அமைந்திருந்தது. குன்றுகளும் குவிந்த சிகரங்களும் பின்னணியாக விளங்கின. நடந்து நடந்து தேய்ந்த ஒற்றையடிப் பாதை. ஆற்றின் மறு கரை நோக்கினேன். வித்யா சங்கரர் ஆலயத்தின் மகோன்னத வேலைப்பாடுகளைக் கண்களால் பருகினேன். அங்கிருந்து எனது கண்களைத் திருப்பினேன். பறவைகளின் சிறகொலி கேட்டேன். இரவில் தங்குவதற்காக அவை தங்கள் தங்கள் மரங்கள் நோக்கிச் சென்றன. நரசிம்ம வனம், அதன் மரங்கள், தோட்டங்கள், அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் ஆறு, சிறு குடில்கள் எல்லாம் உபநிஷத கால ஆசிரமத்தை என் கண்முன் கொண்டுவந்து நிறுத்தின.

அந்த ஒற்றையடிப் பாதை வழியே அதிஷ்டானம் சென்ளேம். அங்கே காவி தரித்த ஓர் உருவம் கம்பீரமாக நின்று கொண்டிருக்கக் கண்டேன். அவர் தம் ஒளி வீசும் கண்கள் என்னை நோக்கியவண்ண மிருந்தன. சற்றுத் தொலைவிலே ஏவலர் ஒருவர் பயபக்தியுடன் நின்று கொண்டிருந்தார். நான் எனது சட்டையைக் கழற்றினேன். அங்க வஸ்திரத்தை இடுப்புக்கு மேலே

கட்டினேன். கீழே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தேன். அவர் புன்முறுவல் பூத்தார். எனது வளர்ப்புப் பெற்ருேர்களும் நமஸ்காரம் செய்தார்கள். அவர் அவர்களைத் திருப்பி நோக்கினுர். புன்முறுவல் செய்தார். கன்னடத்தில் சில கேட்டார். அவர்களும் இரண்டொரு வார்த்தையில் பதில் கூறினுர்கள். அடுத்து என்னை நோக்கினுர். அன்பு கனிந்த குரலில் புன்னகை அரும்பக் கேட்டார் தெலுங்கிலே 'எந்த ஊர்' என்று. எனது சொந்தப் பிரதேசத்திலிருந்து எட்டியுள்ள மற்ருெரு பாஷைப் பகுதியிலே இந்த மாதிரி எனது தாய் மொழியிலே ஒருவர் கேட்டது என்னைத் திடுக்கிடச் செய்தது. சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகர பாரதி மகாஸ்வாமி எதிரில் இருப்பதுணர்ந்தேன். அடங்கி ஒடுங்கினேன். பயபக்தியுடன் பதில் கூறினேன். மகாஸ்வாமிகள் புன்முறுவல் பூத்தவண்ண மிருந்தார்கள். ஏதும் பதில் பேசவில்லை. அவரது மௌனம் பொருள் பொதிந்து விளங்கியது. நான், முற்றும் மாறியதோர் வாலிபனுக விளங்கினேன். 'நீங்கள் போகலாம்' என்று விடை கொடுப்பது போல் தலையசைத்தார். எனது வளர்ப்புப் பெற்ருேரை நோக்கி, தம்மைப் பின்தொடருமாறு என்னை நோக்கித் தலையசைத்தார். நானும் பயபக்தியுடன் சற்றுத் தொலைவில் தொடர்ந்தேன். அதுவரை நின்று கொண்டிருந்த ஏவலரும் பின் வந்தார்.

மகாஸ்வாமி வசிக்கும் சச்சிதானந்த விலாச ஆசிரமத்திலே புனிதமானதோர் அறையினுள் புகுந்தோம். அங்கே ஒரு மூலையில் 'குரு பாதுகைகள்' இருக்கக் கண்டேன். விழுந்து வணங்கினேன். எனது செயலை

ஆமோதிப்பவர்போல் புன்னகை புரிந்தார் அவர். மரத்தால் செய்யப்பட்ட ஆசனத்தின் மீது புலித்தோல் விரிக்கப்பட்டிருந்தது. மகாஸ்வாமிகள் அதன்மீது அமர்ந்தார்கள். உட்காருவதற்கு அறிகுறியாக என்னை நோக்கினூர். நானும் சற்றுத் தொலைவில் உட்கார்ந்தேன். ஏவலரை நோக்கினூர். அவர் அந்த அறையை விட்டு வெளியேறினூர். நாற்புறமும் என் கண்களை வேகமாகச் சுழற்றினேன். மகாஸ்வாமி எளிய தோற்றமளித்தார்; ஒளி வீசினூர்; கம்பீரமாக விளங்கினூர். உபநிஷத ரிஷிகளை நினைவூட்டும் தோற்றம். என்மீது வைத்தகண் மாருமல் சிறிது நேரம் பார்த்துக்கொண்டே இருந்தார். திடீரென்று பேசத் தொடங்கினூர். எனது நட்சத்திரம், எனது ஜாதகம், எனது குடும்ப பூஜா முறை, எனது தந்தையிடம் நான் கொண்ட பேரன்பு முதலியவற்றை யெல்லாம் ஒன்று தவருமல் கூறினூர். நான் ஆச்சரியத்தில் மூழ்கினேன். மீண்டும் மீண்டும் விழுந்து நமஸ்கரித்தேன். கண்களில் நீர் பெருகின. வார்த்தைகள் வரவில்லை. ''உனது மார்பில் உள்ள அறிகுறிகள் நீ யார் என்பதைக் காட்டிவிட்டன. குழந்தாய் உனக்கு உபதேசம் செய்ய வேண்டிய சமயம் வந்து விட்டது'' என்றூர் அவர்.

இன்னதென்று விவரிக்க முடியாததொரு மாறுதல் என்னை ஆட்கொண்டது. உள்ளத்திலே அமைதி ஏற்பட்டது. மகாஸ்வாமி என்னையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அந்தப் பார்வை மூலம் ஒரு பரமானந்த அநுபவத்தை எனக்களித்தார். இதயத்துடன் இணைந்திருந்த புத்தி விடுநலை பெற்றது. சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கியது. உள்நோக்கும் சிந்தனையும்

சுலபமாயின. புறத்தே மின்றுமல் அகத்தே ஒளிவீசத் தொடங்கியது.

“சிருங்கேரி உனது. எனது குழந்தாய் நீ வரும் போதெல்லாம் உன்னை அன்புடன் கவனிக்க நான் இருக்கிறேன்” என்று சொல்லியவாறு அவர் சென்றுர். அவரது அமானுஷிக உயர்வும், துறவியின் சிறப்பும் என் உள்ளத்திலே ஆழமாகப் பதிந்தன. சந்தேகத்துக்கிட மில்லாமல் செய்தன. அவர் என்முன் தோன்றி என்னுள்ளே அவரது ஆத்ம ஒளியின் ஒரு கிரணத்தைப் பாய்ச்சுவது போல் இருக்கிறது.

அதற்குப் பிறகு எப்போதும் எந்நாளும் அவரை நினைத்த வண்ணமே இருக்கிறேன். நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவர் அன்று எனக்களித்த பரமார்த்திக அனுப வரப்பிரசாதத்தை எண்ணுகிறேன். அது என்னைப் பரவசப்படுத்துகிறது.

காலம் உருண்டோடி விட்டது. ஆனுல் நான் கண்ட காட்சி மறையவில்லை. மகாஸ்வாமி எப்போதும் எனதருகில் அமர்ந்து அருளுடன் அமைதியாக என்னையே கவனித்துக் கொண்டிருக்கிருர்.

இன்று — நான் மீண்டும் வந்துள்ளபோது — அதே புன்னகை பூத்த அருள் நோக்குடன் அவர் என்னை கவனிக்கிருர்.

கொஞ்ச நேரம் சென்றது. அதிஷ்டானத்திலிருந்து எழுந்தேன். வணங்கினேன். மீண்டும் மீண்டும் வணங்கினேன். அந்தத் தேய்ந்த ஒற்றையடிப் பாதை வழியே சச்சிதானந்த ஆசிரமத்துக்கு உந்திச் சென்றது ஏதோ ஒரு சக்தி.

## 6. புதிய அருட் பிரசாதம்

ஜகத்குரு அவர்கள் வெளியே வந்து தீர்த்தம் வழங்குவார் என்று எதிர்பார்த்த வண்ணம் சச்சிதானந்த ஆசிரமத்திலே பெருங் கூட்டம் கூடியிருந்தது.

பூஜைப் பெட்டி வெளியே இருந்தது. வழக்கமாக நடைபெறும் பூஜைகளை முடித்து விட்டார்கள்.

நமஸ்காரம் செய்துவிட்டுப் பூஜைப் பெட்டி எதிரே உட்கார்ந்து கொண்டு மூர்த்திகளை நோக்கியவண்ணம் இருந்தேன்.

இந்த மூர்த்திகள் தான் இந்திய நாகரிகத்தின் உருவகம்; அறிகுறி. நாகரிகமும் தத்துவமும் ஒன்றுக் கொன்று இணைந்தவை. இவ்விரண்டின் சாரமே கலா சாரம். இந்திய தத்துவம் என்னும் கழனியிலே மலர்ந்தது தான் இந்திய கலாசாரம்.

இந்திய தத்துவமும் பிறவும் ஈடுகாட்ட முடியாதவை. அவை வளர்ந்து கொண்டே இருக்கின்றன. மனித சமு தாயத்துக்கு நம்பிக்கை கொடுக்கக்கூடிய ஒரே அறிகுறி ஹிந்து தத்துவம்தான்.

மனித சமுதாயத்துக்குத் தான் செய்ய வேண்டிய வைகளை செய்யாமல் ஹிந்து தத்துவம் நழுவுதல் இல்லை. ஜகத்குரு இந்த ஆசிரமத்திலிருந்து அருள் புரிகிறார். மனிதன் தர்மத்திலிருந்து நழுவாதிருக்கச் செய்கிறார். அவனது பிரச்னைகளுக்கு முடிவு காண அருள் புரிகிறார்.

தத்துவ ஞானம் செயல் முறையில் கொண்டுவரப் படுகிறது.

இவ்வாறு நான் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது ஜகத்குரு வெளியே வந்தார். புன்சிரிப்புடன் என் முகத்தை நோக்கினார். நான் வணங்கினேன்.

எல்லாருக்கும் தீர்த்தம் கொடுத்து அனுப்பினார். கடைசியாக எனக்குக் கொடுத்தார். பிறகு உள்ளே சென்றார். பின் தொடருமாறு என்னை அழைத்தார். உள்ளே சென்றேன். நேற்று மாலை அங்கிருந்தது போன்ற பழக்கப்பட்ட உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. மகாஸ்வாமியின் படங்கள் சுவர்மீது மாட்டப்பட்டிருந்தன. சென்ற முறை நான் காணாத புதிய அம்சம் இது ஒன்றே. கால் நூற்றாண்டு முன்பு நான் உட்கார்ந்த அதே அறையில் ஜகத்குரு சென்றார். மரப்பலகை மீது விரிக்கப்பட்டிருந்த புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்தார். மகாஸ்வாமி உட்கார்ந்த பழைய மரப் பலகை என்றே தோன்றியது. குரு பாதுகைகளும் இருந்தன. அவற்றை வணங்கினேன். அதை ஆமோதிப்பவர் போல் ஜகத்குரு புன்முறுவல் பூத்தார். உட்காருவதற்கு அறிகுறியாக என்னை நோக்கினார். கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்தேன். அன்பொழுகும் புன்னகையுடன் என்னை நோக்கினார்.

ஜகத்குருவின் ஆதரவில் இருக்கிறோம் என்ற உணர்ச்சி என்னைக் கவிந்து கொண்டது, என்னுள்ளே ஏதோ ஒருவித உணர்ச்சி பொங்கியது. உபநிஷத ரிஷிகளைப் போல் அவர் காட்சியளித்தார். மெதுவாகப் பேசினார்.

''சிருங்கேரி உன்னுடையது. நீ எப்போது வந்தாலும் வரவேற்க நாங்கள் இருக்கிறோம்'' என்றார்.

இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு அதே அறையில் அதே வார்த்தைகளை நான் கேட்டேன். அவை என் காதில் ஒலிக்கின்றன. மகாஸ்வாமியின் வார்த்தைகள் அவை. அதே வார்த்தைகள்! அதே புன்முறுவல்!

ஜகத்குரு உண்மையில் மகாஸ்வாமியின் வாரிசு தான். உண்மை! இது எனக்குப் பளிச்சென்று விளங்கியது. ஜகத்குருவின் புன்முறுவல் பூத்த உருவம் என் முன்னே மகாஸ்வாமியின் தோற்றத்தை நினைவுறுத்தி நிறுத்துகிறது. மணக்கண்முன் அவர் தோன்றுகிறார். ஜகத்குருவின்மீது படிந்து கரைந்து விடுகிறார். இந்த உண்மையைக் கண்டு கொண்டேன்.

ஆன்மிகச் செல்வம் முழுவதும் உள்ளவர் ஜகத்குரு. முன்னவரின் ஞானமும், அருளும், எல்லாம் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். இந்த உண்மை அறிந்து கொண்டதால் ஒருபடி மேலே சென்றேன்.

எனது உள்ளத்துணர்ச்சி வெள்ளம்போல் கரை புரண்டு ஓடியது. முப்பத்து மூன்று ஜகத்குருவின் உருவங்களும் தோன்றின. பின் ஒன்றாயின. மகாஸ்வாமியின் உருவமாகப் பளிச்சிட்டன. மெதுவாக மகாஸ்வாமி உருவமும் மறைந்தது.

புன்முறுவல் மலர்ந்த முகத்துடன் என் எதிரே ஜகத்குரு வீற்றிருந்தார்.

சங்கிலித் தொடர் போன்ற பரம்பரை நித்யம்—அழியாப் பரம்பரை—இன்னதென்று நான் அறிந்தேன்.

இது வெறும் உணர்ச்சியன்று. உண்மை. ஆற்றிலே வெள்ளம் ஓடிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கணமும் புதிய நீரை கொண்டு வருகிறது. எனினும் அந்த நதியை ஒரே பெயர் கொண்டுதான் அழைக்கிறோம். மாறுதலற்றது என்றே கருதுகிறோம்.

நித்யப் பிரவாகம்! தினசரி நாம் காணும் காட்சி இது. நம் முன்னே நடைபெறும் ஒன்று. எனினும் நாம் உய்த்துணர்வதில்லை.

